Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines)
99526 02900 95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 302 | உள்ளூர் - 31.10.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 302 | வெளியூர் - 01.11.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

கண் திருஷ்டி? 9 சக்திவாய்ந்த பரிகாரங்கள்!

உச்சநீதிமன்றத்தில் 195 பணியிடங்கள்!

மணல் லாரிகள் 3 நாட்கள் ஓடாது!

அரசு பணிக்கான வயது அதிகரிப்பு!

இரும்பு மனிதர் படேலுக்கு தேசத் தலைவர்கள் மரியாதை!

சர்தார் வல்லபபாய் படேலின் பிறந்தநாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

விண்ணில் பாய்ந்த ஜி.எஸ்.எல்.வி. எப்18 ராக்கெட்! இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு!

புதுடெல்லி, அக். 31–

அதிநவீன என்.வி.எஸ்.–03 வழிகாட்டுதல் செயற்கைக்கோளை சுமந்த ஜி.எஸ்.எல்.வி.–எப்18 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் மோடி பாராட்டியுள்ளார்.

இந்த வெற்றி, இந்தியாவின் உள்நாட்டு வழிகாட்டுதல் அமைப்பான 'நேவிக்' தொழில்நுட்பத்தை வலுப்படுத்தும் முக்கிய மைல்கல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தில் தன்னிறைவு பெறவும், மக்களுக்கான வழிகாட்டுதல் சேவைகளை மேம்படுத்தவும் இது உதவும் என்றும், விண்வெளி விஞ்ஞானிகளின் சாதனை நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பணியில் கவனக்குறைவாக செயல்பட்டால் கடும் நடவடிக்கை: சிறைத்துறை அதிகாரிகளுக்கு முதல்-அமைச்சர் விஜய் எச்சரிக்கை!

சென்னை, அக். 31–

பணியில் மெத்தனமாகவோ, கவனக்குறைவாகவோ செயல்படும் சிறைத்துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று முதல்–அமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தேனி மாவட்டச் சிறையில் 26.10.2026 அன்று இரவு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 17 கைதிகள், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு சிறையிலிருந்து தப்பிச் சென்றனர். இச்சம்பவம் குறித்து தகவலறிந்த காவல் துறையினர் துரிதமாகச் செயல்பட்டு, தப்பிச் சென்ற 17 கைதிகளையும் மீண்டும் கைது செய்து, சிறையில் அடைத்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, சிறை நிர்வாகத்தில் ஏற்பட்ட பாதுகாப்புக் குறைபாடுகள், கண்காணிப்புப் பணிகளில் நிலவிய மெத்தனப்போக்கு

மற்றும் பணியில் ஏற்பட்ட கவனக்குறைவு ஆகியவை குறித்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டார்.

அதன்படி, தேனி மாவட்டச் சிறையில் 06.08.2024 முதல் சிறைக் கண்காணிப்பாளர் பொறுப்பை கூடுதலாகக் கவனித்து வந்த துணைச் சிறை அலுவலர் ந. நாகேஸ்வரன், சிறைக் கைதிகள் மற்றும் பணியாளர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பணிகளில் உரிய கவனம் செலுத்தத் தவறியதற்காக, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்படி, 30.10.2026 முதல் மறு உத்தரவு வரும் வரை பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சிறை நிர்வாகத்தில் கண்காணிப்பு, பொறுப்புடைமை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில், மதுரை மத்தியச் சிறைக் கண்காணிப்பாளர் ஆர். கிருஷ்ணராஜ், சேலம் மத்தியச் சிறைக் கண்காணிப்பாளராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிறைகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளில் எவ்விதத் தொய்வும் ஏற்படாத வகையில், சிறைத் துறை அலுவலர்கள் தங்களது பொறுப்புகளை முழு கவனத்துடனும் விழிப்புணர்வுடனும் மேற்கொள்ள வேண்டும் என்றும், பணியில் மெத்தனமாகவோ,கவனக்குறைவாகவோ செயல்படும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவ.14- ந்தேதி அம்பை செல்கிறார் முதல்மைச்சர் விஜய்!

சென்னை, அக். 31–

வரும் நவம்பர் 14–ந்தேதி அன்று முதலமைச்சர் விஜய் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதிக்கு செல்கிறார். குழந்தைகள் தினத்தையொட்டி அரசுப் பள்ளியில் நடைபெற உள்ள விழாவில் கேக் வழங்கி கொண்டாட முதலமைச்சர் முடிவு செய்துள்ளார்.

இதேபோல், முதலமைச்சர் விஜய் நவம்பர் 2–ந்தேதி புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலைக்கு செல்ல உள்ளார். நவம்பர் 3–ந்தேதி ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அரசு விழாவில் பங்கேற்க உள்ளார்.

இடைத்தேர்தலை எதிர்நோக்கியுள்ள தொகுதிகளை குறிவைத்து முதலமைச்சர் விஜய் பயணம் மேற்கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடற்படையை விரிவுபடுத்த ரூ.40,000 கோடியில் 8 அதிநவீன போர்க்கப்பல்கள்!

புதுடெல்லி: கடற்படையை விரிவுப்படுத்த ரூ.40,000 கோடியில் 8 அதிநவீன போர்க்கப்பல்கள் தயாரிக்கும் திட்டத்துக்காக பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

மணல் லாரிகள் 3 நாட்கள் ஓடாது!

சென்னை, அக். 31–

தமிழகத்தில் கனிமவளக் கடத்தல், லாரிகளில் அதிக பாரம் ஏற்றுதல் மற்றும் அதிகாரிகளின் லஞ்ச முறைகேடுகளைக் கண்டித்து நவம்பர் 1 முதல் 3 வரை மூன்று நாட்கள் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறும் என தமிழ்நாடு மாநில மணல் லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் யுவராஜ் அறிவித்துள்ளார். இதனால் 8 மாவட்டங்களில் சுமார் 20 ஆயிரம் லாரிகள் இயங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனிமவளக் கடத்தலைத் தடுக்கவும், விதிமுறைகளை முறையாக அமல்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது

ஈரான் போரை முடிக்க அமெரிக்கா கெடு!

2 நிபந்தனைகளால் பரபரப்பு! 7 நாட்கள் காலக்கெடு!

கத்தார், துருக்கி சமாதான முயற்சி!!

தெஹ்ரான், அக்.31–

அமெரிக்கா ஈரான் இடையிலான போர் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா இரண்டு முக்கிய நிபந்தனைகளை விதித்துள்ளது. அவற்றை ஏழு நாட்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் சர்வதேச அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதலாவது நிபந்தனையாக, ஈரான் தனது கையிருப்பில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை மூன்றாவது நாட்டிற்கு மாற்ற வேண்டும் அல்லது அதன் அளவைக் குறைக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இரண்டாவதாக, உலகின் முக்கிய எண்ணெய் வர்த்தகப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியில் வர்த்தகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் முன்மொழிந்த இந்த நிபந்தனைகள் குறித்து ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த கத்தார் முன்வந்துள்ளது. கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி, தெஹ்ரானில் ஈரான் பாதுகாப்பு அதிகாரி மொஹ்சென் ரெசாயை சந்தித்து அமெரிக்காவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, துருக்கி வெளியுறவு அமைச்சர் ஹக்கான் ஃபிடான், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவை சந்தித்து போர் நிறுத்தம் தொடர்பாக ஆலோசனை நடத்தியுள்ளார். குறிப்பாக, ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக இறுதி உடன்பாடு எட்டப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

கத்தார், துருக்கி ஆகிய நாடுகளின் மத்தியஸ்த முயற்சிகள் வெற்றி பெற்றால் போர் பதற்றம் தணிய வாய்ப்புள்ளது. இல்லையெனில் மத்திய கிழக்கில் பதற்றம் மேலும் அதிகரிக்கக்கூடும்.

உலக நாடுகளின் கவனம் தற்போது அமெரிக்காவின் ஏழு நாள் காலக்கெடு மற்றும் ஈரானின் அடுத்தகட்ட முடிவின் மீது திரும்பியுள்ளது

ஓபிஎஸ்ஸைச் சந்தித்து நலம் விசாரித்தார் உதயநிதி!

"காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் முன்னாள் முதல்வரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்"

- உடல்நிலை குறித்து கேட்டறிந்தார்
- அரசியல் நிலவரங்கள் குறித்து ஆலோசனை நடந்ததாக தகவல்
- சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 31.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 14-ம் தேதி

விண்ணை வென்ற இந்தியா!
உலகை வியக்க வைக்கும் இஸ்ரோ! தோல்வியைத் தகர்த்து சாதனை படைத்த விஞ்ஞானிகள்! விண்வெளியில் புதிய வரலாறு!



இந்தியாவின் அறிவியல் வரலாற்றில் ஒவ்வொரு விண்வெளி வெற்றியும் வெறும் தொழில்நுட்பச் சாதனை மட்டுமல்ல; அது ஒரு தேசத்தின் அறிவாற்றல், தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவற்றின் வெளிப்பாடாகும். அந்த வகையில், அதிநவீன என்விஎஸ்–03 வழிகாட்டி செயற்கைக்கோளைச் சுமந்த ஜிஎஸ்எல்வி எஃப்–18 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டிருப்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் மற்றுமொரு முக்கிய மைல்கல்லாகும்.

வானத்தைப் பார்த்து வியந்த இந்தியா, இன்று விண்வெளியில் தனது அறிவியல் ஆற்றலை நிலைநாட்டி வருகிறது!இதுதான் இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்குக் கிடைத்திருக்கும் பெருமைமிகு அங்கீகாரம்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து அக்டோபர் 30–ஆம் தேதி இரவு 11.51 மணிக்கு ஏவப்பட்ட ராக்கெட், சுமார் 18 நிமிடங்களில் செயற்கைக்கோளைத் திட்டமிட்ட புவி வட்டப்பாதையில் நிலைநிறுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2,250 கிலோ எடையும், 10 ஆண்டுகள் ஆயுட்காலமும் கொண்ட இந்தச் செயற்கைக்கோள், இந்தியாவின் உள்நாட்டு வழிகாட்டுதல் அமைப்பான 'நேவிக்' சேவையை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு நாட்டின் உண்மையான வலிமை அதன் ஆயுதங்களில் மட்டும் இல்லை; அறிவியல் ஆராய்ச்சியிலும் தொழில்நுட்பத் தன்னிறைவிலும்தான் அடங்கியுள்ளது. அந்த உண்மையை இந்தியாவின் விண்வெளித் திட்டங்கள் தொடர்ந்து உணர்த்துகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் வழிகாட்டுதல் தொழில்நுட்பங்களை மட்டுமே சார்ந்திருக்காமல், இந்தியாவுக்கெனத் தனித்துவமான செயற்கைக்கோள் வழிகாட்டுதல் அமைப்பை உருவாக்கியிருப்பது தொலைநோக்குச் சிந்தனையின் விளைவாகும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் பயன் விண்வெளி ஆராய்ச்சியுடன் முடிந்துவிடுவதில்லை. தரைவழி, கடல்வழி, வான்வழிப் போக்குவரத்து, ரயில்வே, ராணுவப் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, தொலைத்தொடர்பு, பொதுமக்களின் அன்றாட வழிகாட்டுதல் சேவைகள் எனப் பல்வேறு துறைகளிலும் அதன் பயன்பாடு விரிவடையக்கூடும். குறிப்பாக, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ரூபிடியம் அணுக் கடிகாரம் போன்ற அதிநவீன கருவிகள் உள்நாட்டுத் தொழில்நுட்ப வளர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

தோல்வி என்பது முயற்சியின் முடிவல்ல; வெற்றிக்கான புதிய பாடம்! கடந்த ஆண்டு ஏவப்பட்ட என்விஎஸ்–02 செயற்கைக்கோளின் சுற்றுப்பாதை உயர்த்தும் முயற்சியில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பின்னடைவு, விண்வெளி ஆராய்ச்சியில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை வெளிப்படுத்தியது. அந்த அனுபவத்திலிருந்து பாடம் கற்று, எரிபொருள் கட்டுப்பாட்டு அமைப்புகள் உள்ளிட்ட தொழில்நுட்பங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவறுகளைக் கண்டறிந்து திருத்திக்கொண்டு முன்னேறுவதுதான் உண்மையான அறிவியல் அணுகுமுறை.

அதேவேளையில், ராக்கெட் ஏவுதல் வெற்றி பெற்றதோடு மட்டும் ஒரு விண்வெளித் திட்டத்தின் முழுமையான பயனையும் மதிப்பிட்டுவிட முடியாது. செயற்கைக்கோளின் நீண்டகாலச் செயல்பாடு, துல்லியமான வழிகாட்டுதல், பொதுமக்களுக்கான சேவைகளின் தரம் ஆகியவற்றையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அறிவியல் சாதனைகளைக் கொண்டாடுவதுடன் அவற்றின் செயல்திறனை வெளிப்படையாக மதிப்பிடுவதும் அவசியம்.

இந்த வெற்றி இன்னொரு முக்கியமான கேள்வியை நம் முன் நிறுத்துகிறது. விண்வெளியில் சாதனை படைக்கும் இந்தியாவில், கிராமப்புற மாணவர்களுக்கும் அறிவியல் ஆராய்ச்சியில் சமமான வாய்ப்புகள் கிடைக்கின்றனவா? அரசுப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள், தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி வசதிகள் போதுமான அளவில் உள்ளனவா? என்பதையும் அரசுகள் சிந்திக்க வேண்டும்.

விண்வெளியில் இந்தியக் கொடி உயரப் பறப்பதோடு, ஒவ்வொரு இந்தியக் குழந்தையின் அறிவியல் கனவும் உயரப் பறக்க வேண்டும்! அதற்காக மத்திய, மாநில அரசுகள் அறிவியல் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டும். இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டங்கள் கிராமங்கள்வரை சென்றடைய வேண்டும்.

இஸ்ரோவின் சாதனையைப் பாராட்டுவது மட்டுமல்ல, அடுத்த தலைமுறை விஞ்ஞானிகளை உருவாக்குவதும் தேசத்தின் கடமையாகும்.

ராக்கெட்டை விண்ணில் செலுத்துவது அறிவியலின் வெற்றி; அறிவியலை ஒவ்வொரு மாணவரிடமும் கொண்டு சேர்ப்பதுதான் தேசத்தின் உண்மையான வெற்றி!

இந்திய விஞ்ஞானிகளின் உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் மதுரை மணி தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

விண்ணைத் தொடுவது சாதனை! அறிவால் உலகை உயர்த்துவதே மகத்தான சாதனை!

ஆசிரியர்,
மதுரை மணி நாளிதழ்

மத்திய அரசின் நிதி பற்றாக்குறை 42.1% ஆக அதிகரிப்பு: சிஜிஏ



புதுடெல்லி, அக். 31–

நிகழ் நிதியாண்டின் முதல் பாதியில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை, முழு ஆண்டு பட்ஜெட் இலக்கில் 42.1 சதவீதத்தை எட்டியுள்ளது என மத்திய அரசு சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதுதொடர்பாக மத்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சிஜிஏ) வெளியிட்ட தரவில் மேலும் கூறியிருப்பதாவது:

நிகழாண்டு செப்டம்பர் மாதம் வரை மத்திய அரசின் நிகர வரி வருவாய் ரூ. 12.76 லட்சம் கோடியாக, அதாவது நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட் மதிப்பீட்டில் 44.5 சதவீதமாக இருந்தது. இந்த வருவாய் கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 43.3 சதவீதமாக இருந்தது. அதே நேரம், மாதாந்திர கணக்குத் தரவுகளின்படி, மத்திய அரசின் மொத்த செலவினம் சுமார் ரூ. 25.5 லட்சம் கோடியாக உள்ளது. இது, கடந்த பிப்ரவரி மாதம் மத்திய நிதியமைச்சர் நிர்லா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த 2026–27–ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடுகளில் 47.7 சதவீதத்துக்குச் சமமாகும்.

அதன்படி, நிகழ் நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை, முழு ஆண்டுக்கான ஒட்டுமொத்த பட்ஜெட் இலக்கில் 42.1 சதவீதத்தை எட்டியுள்ளது. அதாவது, செப்டம்பர் மாத இறுதியில் செலவினங்களுக்கும் வருவாய்க்கும் இடையேயான இடைவெளி ரூ. 7,14,413 கோடியாக உள்ளது.

முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில், நிதிப் பற்றாக்குறை 2025–26–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மத்திப்பீடுகளில் 36.5 சதவீதமாக இருந்தது. தற்போது 42.1 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நவம்பரில் வருது நம்பிக்கை இல்லா தீர்மானம்?

சென்னை, அக். 31–

சட்டசபையில், த.வெ.க., அரசு, மீண்டும் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய சூழல் உருவாகி வருவதால், அ.தி.மு.க., அதிருப்தி அணியிடம் பேச்சை துவங்கி இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

த.வெ.க., மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: சட்டசபை தேர்தலில், பெரும்பான்மை கிடைக்காமல், காங்., – வி.சி.க., – கம்யூ., முஸ்லிம் லீக் கட்சிகள் ஆதரவோடு கூட்டணி ஆட்சியை, த.வெ.க., நடத்தி வருகிறது. இந்நிலையில், கம்யூ., கட்சிகள், எப்போது வேண்டுமெனாலும், ஆதரவை திரும்ப பெறும் நிலை உள்ளது. அதை ஈடுகட்ட, பா.ம.க., ஆதரவை பெற, த.வெ.க., பேச்சு நடத்தினால், வி.சி.க., அதிருப்தியாகிறது.

சட்டசபையில், கடந்த மே 13ம் தேதி, த.வெ.க., அரசு நம்பிக்கை ஓட்டெடுப்பு நடத்தி வெற்றி பெற்றது. ஆறு மாதத்துக்கு, அந்த தீர்மானத்தை மறுபடியும் கொண்டு வர முடியாது. அந்த அவகாசம், வரும் நவ., 13ம் தேதியோடு முடிகிறது. அதன்பிறகு, எதிர்க்கட்சிகள் சார்பில் கூட, நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர முடியும். எனவே, பெரும்பான்மையை மீண்டும் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் த.வெ.க.,வுக்கு ஏற்படும்.

இதை கருத்தில் கொண்டு, அ.தி.மு.க.,வில் அதிருப்தி அணியாக செயல்படும் முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, சண்முகம் தலைமையிலான எம்.எல்.ஏ.,க்களின் ஆதரவை பெற, த.வெ.க., மேலிடம் முடிவு செய்துள்ளது. சென்னை எம்.ஆர்.சி., நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில், முன்னாள் அமைச்சர் ஒருவருடன் பேச்சு நடந்துள்ளது.

ஆனால், 'கடந்த ஓட்டெடுப்பின்போது, ஆதரவளித்த எங்களை ஏமாற்றி விட்டீர்கள். எங்கள் தரப்பில் இருந்தே ஆறு எம்.எல்.ஏ.,க்களை இழுத்து விட்டீர்கள். எனவே, முதல்வர் விஜய் வாக்குறுதி அளித்தால் தான், ஆதரவு கொடுப்போம்' என, அந்த முன்னாள் அமைச்சர் உறுதியாக சொல்லி இருக்கிறார். இதையடுத்து, 'நவம்பரில் என்ன வேண்டுமென்றாலும் நடக்கலாம். நீங்கள் உங்களின் தரப்பை வலுப்படுத்துங்கள். முதல்வரிடம் பேசுகிறோம். கடந்த முறைபோல் ஆகாது' என, த.வெ.க., மேலிடம் உறுதி அளித்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்தது...!

சென்னை, அக். 31–

வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்துள்ளது. நேற்று தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது. அடுத்த 12 மணி நேரத்தில் மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக (Depression) வலுவடையும் என்றும், அடுத்த 2 நாட்களில் மத்திய–மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஆந்திர கடலோரப் பகுதிகளை அடையக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.



இதன் காரணமாக இன்று தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை வடக்கு கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர் மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன், லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளது.

மேலும் வருகிற 2–ம்தேதி, நீலகிரி மாவட்டத்தில், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை காரணமாக, அக்டோபர் 1 முதல் 30–ம்தேதி வரை, 21 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இது, இயல்பை விட 32 சதவீதம் அதிகம்.

தீபாவளி பண்டிகை கொண்டாடப்படும் நவம்பர் 8–ம்தேதி, தமிழகத்தில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது; கனமழைக்கு வாய்ப்பு குறைவு என்று சென்னை வானிலை மைய இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பஸ் நிலையங்கள், மருத்துவமனைகள் கட்டும்போது... மதுரை ஐகோர்ட்டு பரபரப்பு உத்தரவு!

மதுரை, அக். 31–

பஸ் நிலையம், மருத்துவமனைகளை அமைக்கும்போது எதிர்கால விரிவாக்கத்தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. நெல்லை மாவட்டம் ராதாபுரத்தை சேர்ந்த குமார் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், 2017–ம் ஆண்டு திறக்கப்பட்ட நாகர்கோவில் சந்தை வளாகத்தை 10 ஆண்டுகளுக்குள் இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்ட திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் அமர்வு, ஏற்கனவே 150 கடைகள் இடிக்கப்பட்டு மாற்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்தது. ஆனால், இந்த வழக்கில், பஸ் நிலையம், மருத்துவமனைகள் போன்ற பொதுக்கட்டிடங்களை அமைக்கும்போது எதிர்கால விரிவாக்கத்தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும். போதிய இடவசதியின்றி உள்கட்டமைப்புகளை உருவாக்கிவிட்டு சில ஆண்டுகளில் அவற்றை இடிப்பது பொது நிதியை வீணடிக்கும் என்று குறிப்பிட்ட நீதிபதிகள், எதிர்கால விரிவாக்கத்திற்கு கூடுதல் நிலம் மற்றும் இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் தொலைநோக்கு பார்வையுடன் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

புறநகர் மின்சார ரெயில் கால அட்டவணை மாற்றம்!

சென்னை, அக். 31–

சென்னை புறநகர் மின்சார ரெயில் சேவையின் கால அட்டவணையை தெற்கு ரெயில்வே மாற்றி அமைத்துள்ளது. இந்த புதிய கால அட்டவணை நவ 1 முதல் அமலுக்கு வருகிறது.

அதன்படி, சென்னை சென்டிரல் – அரக்கோணம் வழித்தடத்தில் திருவள்ளூர் –சென்டிரல் இடையே புதிய மின்சார ரெயில் சேவை அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த ரெயில் திருவள்ளூரில் இருந்து மதியம் 12.25 மணிக்கு புறப்பட்டு 1.45 மணிக்கு சென்டிரல் வந்தடையும். காலை 7.10 மணிக்கு சென்டிரலில் இருந்து புறப்பட்டு பட்டாபிராம் வரை இயக்கப்பட்டு வந்த ரெயில் சேவை, திருவள்ளூர் வரை நீட்டிக்கப்படுகிறது. இந்த ரெயில் 8.30 மணிக்கு திருவள்ளூர் வந்தடையும். இந்த ரெயில் 8.45 மணிக்கு திருவள்ளூரில் இருந்து புறப்பட்டு 10.20 மணிக்கு சென்டிரல் சென்றடையும்.

சென்டிரலில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்பட்டு திருவள்ளூர் வரை இயக்கப் பட்டு வந்த மின்சார ரெயில் கடம்பத்தூர் வரை நீட்டிக்கப்படுகிறது. மறுமார்க்க மாக இந்த ரெயில் கடம்பத்தூரில் இருந்து மதியம் 3.35 மணிக்கு புறப்பட்டு 5.05 மணிக்கு சென்டிரல் வந்தடையும். சென்டிரலில் இருந்து இரவு 7.30 மணிக்கு அரக்கோணத்துக்கு அதிவேக மின்சார ரெயிலாக இயக்கப்பட்டு வந்த ரெயில் சேவை இனி அனைத்து ரெயில் நிலையங்களிலும் நின்று செல்லும்.

இதேபோல, சென்டிரல் –சூலூர்பேட்டை வழித்தடத்தில் புதிய கால அட்டவணை யின் படி சில ரெயில் சேவைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்டிரலில் இருந்து காலை 5.20 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில் சூலூர்பேட்டை வரை நீட்டிக்கப்படுகிறது. இந்த ரெயில் சூலூர் பேட்டையில் இருந்து 8.10 மணிக்கு புறப்பட்டு 10.40 மணிக்கு சென்டிரல் வந்த டையும். சென்னை கடற்கரை – செங்கல்பட்டு வழித்தடத்தில், அரக்கோணத்தில் இருந்து 7.30 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில் கூடுவாஞ்சேரியில் நின்று செல்லும். சென்னை கடற்கரை – தாம்பரம் –செங்கல்பட்டு – காஞ்சீபுரம் – அரக்கோணம் வழித்தடம், சென்னை கடற்கரை – வேளச்சேரி – பரங்கிமலை வழித்தடத்தில் கால அட்டவணை மாற்றம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கண் திருஷ்டி? 9 சக்திவாய்ந்த பரிகாரங்கள்!

கண் திருஷ்டி என்பது ஒருவரின் வளர்ச்சி, செல்வம், அழகு, புகழ் ஆகியவற்றைக் கண்டு பிறர் பொறாமையுடன் பார்ப்பதால் ஏற்படும் தீய தாக்கம் என்று பாரம்பரியமாக நம்பப்படுகிறது. இதனை "கண்ணேறு" என்றும் அழைக்கின்றனர்.

குழந்தைகளின் கன்னத்தில் கருப்புப் பொட்டு வைப்பது, புதிய வீடுகளின் முன்பு திருஷ்டிப் பொம்மை கட்டுவது போன்ற பழக்கங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது என்ற பழமொழியும் இதனையே உணர்த்துகிறது.

கண் திருஷ்டியின் அறிகுறிகள் ?

பாரம்பரிய நம்பிக்கைகளின்படி, குழந்தைகள் அடிக்கடி அழுவது, உணவு சாப்பிட மறுப்பது, குடும்பத்தில் தேவையற்ற சண்டைகள் ஏற்படுவது, தொழிலில் நஷ்டம், தொடர் தோல்விகள், எதிர்பாராத செலவுகள் போன்றவை கண் திருஷ்டியுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இருப்பினும், இவை கண் திருஷ்டிக்கான அறிவியல் ஆதாரங்களாகக் கருதப்படுவதில்லை.

ஜாதகத்தில் கண் திருஷ்டி தெரியுமா?

ஜோதிட நம்பிக்கையின்படி, ராகு, மாந்தி ஆகியவற்றின் நிலை, ஆறாம் பாவம், லக்னம் மற்றும் பாவக் கிரகங்களின் பார்வை ஆகியவற்றைக் கொண்டு கண் திருஷ்டி தொடர்பான பலன்கள் கணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கண் திருஷ்டி நீங்க 9 பரிகாரங்கள்!

வாரத்திற்கு இரண்டு முறை திருஷ்டி கழிக்கலாம்.

செவ்வாய், வியாழன், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகள் திருஷ்டி கழிக்க உகந்த நாட்களாகக் கருதப்படுகின்றன.

அமாவாசை நாளிலும் திருஷ்டி கழிக்கும் வழக்கம் உள்ளது.

கிழக்கு திசை நோக்கி நின்று திருஷ்டி கழிக்கலாம்.

வயதில் மூத்தவர்கள் திருஷ்டி கழிப்பது சிறந்ததாக நம்பப்படுகிறது.

பூசணிக்காய், தேங்காய் அல்லது எலுமிச்சம்பழம் கொண்டு திருஷ்டி சுற்றும் வழக்கம் உள்ளது.

மிளகாய், மிளகு, உப்பு ஆகியவற்றைக் கொண்டு திருஷ்டி கழிப்பதும் பாரம்பரிய நடைமுறையாகும்.

ஜாதகத்திற்கு ஏற்ற ராசிக்கல் மோதிரம் அணிவது பரிகாரமாகக் கூறப்படுகிறது.

எலுமிச்சம்பழத்தைக் கொண்டு திருஷ்டி சுற்றி முச்சந்தியில் போடும் வழக்கமும் உள்ளது.

நம்பிக்கையும் விழிப்புணர்வும் அவசியம்!

கண் திருஷ்டி தொடர்பான பரிகாரங்கள் ஆன்மிக மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றின் பலன்களுக்கு அறிவியல் ஆதாரம் இல்லை. திருஷ்டி கழிப்பதாகக் கூறி தீ விபத்து, புகை பாதிப்பு அல்லது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகளுக்கு உடல்நலக் குறைவு, தொடர்ந்து அழுகை அல்லது உணவு உண்ணாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

ஆண்டுதோறும் நவம்பர் 1-ந் தேதி
'தமிழ்நாடு நாள்' கொண்டாடப்படும்-தமிழக அரசு!

சென்னை, அக். 31–

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 1956–ம் ஆண்டு நவம்பர் 1–ந் தேதியை பெருமைப்ப டுத்திடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1–ம் நாள் 'தமிழ்நாடு நாள்' என்ற பெயரில் தமிழ்நாடு அரசால் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.தமிழ்நாடு முதல்–அமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நவம்பர் 1–ம் நாள் தமிழ்நாடு நாள் விழாவாக சென்னை அருங்காட்சியக அரங்கத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், 5 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்தமைக் கான நூலுரிமைத்தொகை வழங்கிடவும், திருக்குறள் முற்றோதல் செய்த 179 மாணவர்களுக்குப் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிடவும், தமிழ் செம்மல் விருதுகள் 76 அறிஞர்களுக்கு வழங்கியும் சிறப்பிக்க உள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாற்று திறனாளிகளுக்கு ஏஐ சார்ந்த நவீன உதவி உபகரணம் வாங்க நிதி!

சென்னை, அக். 31–

மாற்றுத்திறனாளிகளுக்குச் செயற்கை நுண்ணறிவு சார்ந்த நவீன உதவி உபகரணங்கள் வாங்கிட ரூ.30,000 அல்லது 50% நிதியுதவி, இவற்றில் எது குறைவோ, அதனை உதவித்தொகையாக வழங்கிட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். விளையாட்டு செயற்கை உறுப்பு, மின்தசை சமிக்ஞை மூலம் செயல்படும் மேல்கை செயற்கை அவயம், பிற உயர்தர உதவி உபகரணங்கள் மற்றும் காக்ளியர் இம்பிளான்ட் பேட்டரி போன்ற பிற உயர்வகை உதவி உபகரணங்களை வாங்குவதற்கான உதவித்தொகை இது.

குழந்தைகளுக்கு ஆரோக்கியமான 5 ஸ்நாக்ஸ்! சிப்ஸ், பிஸ்கட்டுக்கு மாற்றாக கம்பு பலகாரங்கள்!

குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் கடைகளில் வாங்கும் சிப்ஸ், பிஸ்கட் போன்றவற்றுக்குப் பதிலாக, வீட்டிலேயே கம்பு மாவில் சுவையான சிற்றுண்டிகளைத் தயாரித்துக் கொடுக்கலாம். நார்ச்சத்து, புரதம் உள்ளிட்ட ஊட்டச்சத்துகள் நிறைந்த கம்பில் ஐந்து வகையான பலகாரங்களை எளிதாகச் செய்யலாம்.

1. **கம்பு பிஸ்கட்:** கம்பு மாவு, கோதுமை மாவு, நாட்டுச் சர்க்கரை, வெண்ணெய், ஏலக்காய் சேர்த்து பிசைந்து பிஸ்கட்டாகச் சுடலாம்.

2. **கம்பு காராச்சேவு:** கம்பு மாவுடன் கடலை மாவு, சீரகம், மிளகாய்த்தூள் சேர்த்து எண்ணெயில் பொரித்தெடுக்கலாம்.

3. **ரிப்பன் பக்கோடா:** கம்பு மாவு, அரிசி மாவு, கடலை மாவு, மசாலாப் பொருட்கள் சேர்த்து மொறுமொறுப்பாகத் தயாரிக்கலாம்.

4. **கம்பு கொழுக்கட்டை:** வெல்லம், தேங்காய் சேர்த்து இனிப்பாகவும், மிளகாய், கறிவேப்பிலை சேர்த்துக் காரமாகவும் ஆவியில் வேகவைக்கலாம்.

5. **கம்பு இனிப்பு அப்பம்:** கம்பு மாவு, வெல்லம், பழுத்த வாழைப்பழம் சேர்த்து பணியாரக் கல்லில் சுடலாம்.

குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு நாளும் ஒரு வகையைத் தயாரித்துக் கொடுக்கலாம். எண்ணெய், உப்பு, சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதும் அவசியம்.

ரூ.200 கோடி மோசடி வழக்கு... நடிகை நோரா பதேகிக்கு நீதிமன்றம் சம்மன்!

பாலிவுட் நடிகை நோரா பதேகிக்கு டெல்லி நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது. ரூ.200 கோடி மோசடி மற்றும் பணம் பறித்தல் வழக்கில், சாட்சியாக ஆஜராக அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பிரபல மோசடி மன்னனாகக் கூறப்படும் சுகேஷ் சந்திரசேகர், டெல்லி ரோகிணி சிறையில் இருந்தபோது, அரசு உயர் அதிகாரி போல ஆள்மாறாட்டம் செய்து பணம் பறித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

அதாவது, முன்னாள் ரான்பாக்சி நிறுவன உரிமையாளர் ஷிவிந்தர் மோகன் சிங்கின் மனைவி அதிதி சிங்கிடம் இருந்து, 2020–2021 காலகட்டத்தில் சுமார் ரூ.200 கோடி பணம் பெற்றதாக அவர் மீது புகார் அளிக்கப்பட்டது. சிறையில் இருந்த தனது கணவரை விடுதலை செய்ய உதவுவதாகக் கூறி சுகேஷ் பணம் பெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக நடிகை நோரா பதேகியிடமும் ஏற்கனவே டெல்லி போலீசார் விசாரணை நடத்தியுள்ளனர். சுகேஷ் சந்திரசேகருடனான தொடர்பு மற்றும் அவரது மனைவி லீனா மரியா பவுலோஸ் உடனான தொடர்பு குறித்து அவரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அப்போது, சுகேஷ் சந்திரசேகருடன் தனது தொடர்பு அவரது மனைவி மூலமாகவே ஏற்பட்டதாக நோரா பதேகி விசாரணையின்போது தெரிவித்திருந்தார். மேலும், 2020–ம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பங்கேற்றது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில், டெல்லியின் ரோஸ் அவென்யூ நீதிமன்றம் நோரா பதேகியை வழக்கில் சாட்சியாகப் பட்டியலிட்டுள்ளது. இதையடுத்து, வரும் நவம்பர் 2–ந்தேதி நீதிமன்றத்தில் ஆஜராக அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவர் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லாமல், சாட்சியாகவே ஆஜராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

‘ராமாயணா’ படத்தில் சாய் பல்லவியின் சம்பளம் எவ்வளவு தெரியுமா?



சீதையாக நடித்துள்ள நடிகை சாய் பல்லவியின் சம்பளம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, ‘ராமாயணா’ படத்தின் இரண்டு பாகங்களிலும் நடிப்பதற்காக அவருக்கு மொத்தம் ரூ.12 கோடி சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதாவது, ஒவ்வொரு பாகத்திற்கும் தலா ரூ.6 கோடி சம்பளமாகப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இது சாய் பல்லவியின் திரைப்பயணத்திலேயே அதிகபட்ச சம்பளம் என்றும் கூறப்படுகிறது. எனினும், அவரது சம்பளம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

மஹாராஷ்டிர அரசியலில் திடீர் திருப்பம்! மாறுகிறதா கூட்டணி கணக்கு?

மும்பை, அக். 31–

மஹாராஷ்டிர சட்ட மேல்சபைத் தேர்தலில் ஆளும் மஹாயுதி கூட்டணி பின்னடைவைச் சந்தித்ததைத் தொடர்ந்து, பா.ஜ., ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா இடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

ஐந்து இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளின் மஹா விகாஸ் அகாதி கூட்டணி மூன்று இடங்களையும், ஆளும் மஹாயுதி கூட்டணி இரண்டு இடங்களையும் கைப்பற்றின. தோல்விக்கு கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்பின்மையே காரணம் என இருதரப்பும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் முதல்வர் தேவேந்திர பட்னவிஸ், முன்னாள் முதல்வர் உத்தவ் தாக்கரே, ராஜ் தாக்கரே ஆகியோர் ஒரே மேடையில் பங்கேற்றனர். ஆளும் கூட்டணியில் கருத்து வேறுபாடு நீடிக்கும் சூழலில், இந்தச் சந்திப்பு மஹாராஷ்டிர அரசியல் வட்டாரத்தில் புதிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

பசும்பொன் தேவர் குருபூஜை விழா: பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

ராமநாதபுரம், அக். 31–

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பசும்பொன்னில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 119–வது பிறந்தநாள் விழா மற்றும் 64–வது குருபூஜையை முன்னிட்டு, தமிழக அரசு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 194 பயனாளிகளுக்கு ரூ.79 லட்சத்து 70 ஆயிரத்து 50 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவையொட்டி, பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவரின் திருவுருவச் சிலைக்கு தமிழக அரசு சார்பில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ. மதன் ராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு. வே.க. ராஜீவ், மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சிவகுரு பிரபாகரன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கபாண்டி (மதுரை மேற்கு), எம்.எம். கோபிசன் (மதுரை தெற்கு), எம்.வி. கருப்பையா (சோழவந்தான்), ஏ. குழந்தைராணி நாச்சியார் (சிவகங்கை), டி. இளங்கோவன் (மானாமதுரை), ஆர். சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்) ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சிவகுரு பிரபாகரன், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கட்டணக் கொள்ளை! ஆம்னி பஸ் உரிமம் ரத்து!

சென்னை, அக். 31–

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆம்னி பேருந்துகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிப்பதை தடுப்பது, போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக, முதன்மை செயலாளர் / போக்குவரத்து ஆணையர், சிஜி தாமஸ் வைத்யன், போக்குவரத்து துறை அரசு செயலாளர், இல.நிர்மல்ராஜ், மற்றும் சென்னை மாநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர், முனைவர் வீ.ப. ஜெயசீலன் ஆகியோர் தலைமையில் மாநில போக்குவரத்து ஆணையரகத்தில் 29.10.2026 அன்று கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கும், போக்குவரத்து நெரிசலை தவிர்த்து பயணங்களை சிரமமின்றி மேற்கொள்ளவும் ஆம்னி பேருந்துகளை கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகிலுள்ள திருவசந்தம் உணவகத்திற்கு முன்னர் நிறுத்தக்கூடாது எனவும், இணையவழி தளத்தில் இடம்பெற்றுள்ள திருவசந்தம் உணவகம் என்ற இடத்தினை நீக்கம் செய்யும்படியும், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்குள் சென்று ஆம்னி பேருந்துகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுத்துமிடத்தில் மட்டுமே நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்லவும் அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு திருவசந்தம் உணவகம் முன்பு ஆம்னி பேருந்துகள் நிறுத்தப்படும்பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பண்டிகைக் காலங்களில் ஆம்னி பேருந்துகள் வழக்கத்திற்கு மாறாக அதிகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், அதிகக் கட்டணம் வசூலிக்கும் ஆம்னி பேருந்துகள் சிறை பிடிக்கப்பட்டு, அனுமதிச்சான்று மீது தற்காலிக தடை / அனுமதி இரத்து போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டது. அதனை கண்காணிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதுமுள்ள 12 சரகங்களில் சிறப்புப் பறக்கும் படை (Enforcement Team) குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் காவல் துறை உயர் அதிகாரிகள், கிளாம்பாக்கம் பேருந்து நிலைய மாவட்ட வருவாய் அலுவலர், அரசு விரைவு போக்குவரத்துக் கழக பொது மேலாளர், இணையதள ஆம்னி பேருந்து பதிவு நிறுவனங்கள் (Abhi Bus, Red Bus. Zing Bus, Flix Bus, Paytm) மற்றும் தமிழ்நாடு ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இனிவரும் நாட்களில், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாகப் புகார்கள் வரும்பட்சத்தில், அனுமதி இரத்து போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புகார் தெரிவிக்க வேண்டிய கைப்பேசி எண்: 1800 425 6151

புகார் தெரிவிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி: tc.tn@nic.in என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடத் தடை?

சென்னை, அக். 31–

அரசுப் பள்ளிகளில் புதிதாக பணியில் சேரும் ஆசிரியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடை செய்யும் வகையில் புதிய விதிகளை மேற்கு வங்க அரசு விரைவில் உருவாக்க உள்ளது.

இதுதொடர்பாக, மாநில முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக மாநில கல்வி அமைச்சர் தீபக் பர்மன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: மேற்கு வங்க மாநில பள்ளிப் பணிகள் தேர்வாணைய (எஸ்எஸ்சி) தேர்வுகள் மூலம் புதிதாகத் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் புதிய விதிகளை உருவாக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்த நடைமுறை ஏற்கெனவே பல மாநிலங்களில் அமலில் உள்ளது. விரைவில் இந்த விதிகள் உருவாக்கப்படும். ஏற்கெனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்த விதிகள் பொருந்தாது. மேலும், ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பொறுப்புகூறல் நடைமுறையை அடுத்த கல்வியாண்டுமுதல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாட்டுக்கு ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும். அதாவது, ஆசிரியர்களின் செயல்திறன் அடிப்படையில், அவர்களுக்கான ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் வழங்கப்படும் என்றார். முன்னதாக, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், ‘எஸ்எஸ்சி மூலம் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதை அல்லது தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்யும் வகையில் விதிகளை வகுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே பள்ளிகளில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கும், தேர்தலில் போட்டியிட்டு ஊராட்சி மற்றும் நகராட்சி மன்ற பதவிகளை வகிப்பவர்களுக்கும் இது பொருந்தாது. வேறு எந்த மாநிலத்திலும் ஆசிரியர்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை. பிகார், உத்தர பிரதேச மாநிலங்களை உதாரணமாகக் கொண்டு, மேற்கு வங்கத்திலும் இதுபோன்ற விதிகளைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது’ என்றார்.

ஜன.25 முதல் பிப்.28 வரை மக்கள்தொகை கணக்கெடுப்பு: ஆணையர் அறிவிப்பு!

புதுடெல்லி, அக். 31–

நாடு முழுவதும் வீடு வீடாக மக்கள்தொகை கணக்கெடுக்கும் பணி, அடுத்த ஆண்டு ஜனவரி 25 முதல் பிப்ரவரி 28 வரை நடைபெறும் என்று இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகை ஆணையர் மிருத்யுஞ்சய் குமார் நாராயண் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிக்கையில், ‘2027, மார்ச் 1–ஆம் தேதியை காலக்கெடு நாளாகக் கொண்டு, ஜனவரி 25 முதல் பிப்ரவரி 28 வரை மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி நடைபெறும். பேரவைத் தேர்தலை எதிர்கொண்டுள்ள உத்தர பிரதேசம், பஞ்சாப், உத்தரகண்ட், கோவா மற்றும் பனிப்பொழிவு காணப்படும் லடாக், ஹிமாசல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர் பகுதிகளைத் தவிர நாடு முழுவதும் பிற அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்தப் பணி நடைபெறும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் ‘மறுபரிசீலனை சுற்று’ மார்ச் 1 முதல் 5–ஆம் தேதி வரை நடைபெறும். வீடு வீடாக மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடங்கப்படும் முன்பாக ஜனவரி 10 முதல் 24 வரை சுய கணக்கெடுப்புக்கான வாய்ப்பு வழங்கப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முதல் எண்ம மக்கள்தொகை கணக்கெடுப்பு என்ற சிறப்புக்குரிய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027–இன் முதல் கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

வேலை வாய்ப்பு உச்சநீதிமன்றத்தில் 195 பணியிடங்கள்!

இந்திய உச்சநீதிமன்றத்தில் முதுநிலை தனி உதவியாளர் (Senior Personal Assistant), இளநிலை நீதிமன்ற உதவியாளர் (Junior Court Attendant) ஆகிய இரண்டு வகையான பதவிகளில் மொத்தம் 195 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

1. முதுநிலை தனி உதவியாளர் 65 பணியிடங்கள்
அறிவிப்பு எண்: F.6/11/SPA/2026–SC(RC)
விண்ணப்பம் தொடக்கம்: 20.10.2026
கடைசி நாள்: 10.11.2026

2. இளநிலை நீதிமன்ற உதவியாளர் 130 பணியிடங்கள்
அறிவிப்பு எண்: F.3/2026–SC (RC)
விண்ணப்பம் தொடக்கம்: 04.11.2026
கடைசி நாள்: 25.11.2026 இரவு 11.55 மணி

இரண்டு அறிவிப்புகளிலும் மத்திய அரசின் நிரந்தரப் பணிகளுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கல்வித்தகுதி, வயது வரம்பு, தேர்வு முறை உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்புகளில் தெரிந்துகொள்ளலாம்.

மொத்த காலியிடங்கள்: 195
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.sci.gov.in/

அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, அக். 31–

தங்கம் விலை மேலும் அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.2,480 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,01,840–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.310 குறைந்து, ஒரு கிராம் ரூ.12,730–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், கடந்த 25–ந்தேதியில் இருந்து 28–ந்தேதி வரை விலை மாற்றம் இல்லாமல் இருந்து, கடந்த 2 நாட்களாக விலை குறைந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றும் வெள்ளி விலை குறைந்துள்ளது. கிராமுக்கு ரூ.10–ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.200–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்பு!

மதுரை, அக். 31–

தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்பு சுதந்திரப் போராட்ட வீரர், இந்தியாவின் முதல் துணை பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளான அக்டோபர் 31 அன்று தேசிய ஒற்றுமை தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 30) அன்று ரயில்வே அதிகாரிகளும், ஊழியர்களும் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா தலைமையில் நடைபெற்றது. நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன். இந்த உறுதிமொழியை மற்றவர்களுக்கு கொண்டு செல்ல கடும் முயற்சி செய்வேன். சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் தொலைநோக்கு பார்வையால் உருவான நமது நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வை பாதுகாப்பேன். எனது சொந்த பங்களிப்பால் உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்வேன் என ரயில்வே அதிகாரிகளும், ஊழியர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

இன்றைய கார்ட்டூன்

இரண்டு நாள் ஜெயில் சாப்பாடு... 4 கிலோ எடை குறைந்துவிட்டதாம்!



திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் 39–வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்திய துணை ஜனாதியதி சி.பி.. , ராதாகிருஷ்ணன் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார். விழாவில், தமிழ்நாடு ஆளுநர் அர்லேகர், பல்கலைகழக வேந்தர் அண்ணமலை கலந்துகொள்கின்றனர். 1400– மாணவ மாணவிகள் பட்டங்களை பெறுகின்றனர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், விஞ்ஞானி நம்பிநாராயணன் மற்றும் ஆன்மீக சொற்பொழிவாளர் சொ.சொ., மீனாட்சிசுந்தரம் ஆகியோர்க்கு கௌரவ டாக்டர் பட்டங்களை துணை ஜனாதிபதி சி.பி., ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

மொழிவாரி மாநிலம் பிரிந்த நாள்: 01-11-1956

உரிமைகளைப் பெற உணர்வு வேண்டும். உணர்வின் மூலமே போராட்டம் பிறக்கும். போரா ட்டத்தின் வழியாக வெற்றியும் தரும். இதுவே வாழ்வின் கண்கூ டான உண்மை. மொழி அடிப்ப டையில் நாட்டில் பெரும்பாலான பகுதிகள் தனித்து இருந்ததால் 1950ஆம் ஆண்டுகளில் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அனைவர் மனதிலும் வலுவாக வேரூன்றியது. இதனை அப்போதைய பிரதமர் நேருவும் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலும் ஏற்க மறுத்தனர்.

அப்போது சென்னை மாநி லத்தின் உறுப்பாக இருந்த தெலுங்கு பேசும் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளைப் பிரித்து விசால ஆந்திராவாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

இதற்கு மூலக் காரணம் ஆந்திர காங்கிரசு தலைவர்களில் ஒருவரான பொட்டி சிரிராமலு ஆவார். இந்தக் கோரிக்கைக்கு உயிர் கொடுப்பதற்காகச் சென்னையில் 1952ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் காலவரையற்ற உண்ணாவிரதம் தொடங்கி 68 நாள்களுக்குப் பின்னர் டிசம்பர் 15ஆம் நாள் உயிர் நீத்தார்.

அவரது அளப்பரிய தியாகத்தால் தெலுங்கு பேசும் பகுதிகள் தனி மாநிலம் ஆக்கப்படும் என்று அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குப் பிரதமர் நேரு ஆளானார். இதனால் 1953ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் தனி ஆந்திரப் பிரதேசம் உதயமானது. இது மற்ற மொழிவாரி மாநிலங்களின் உருவாக்கத்துக்கு வித்திட்டது.

இந்த நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் அனைத்தும் கூடலூர், கம்பம், தேனி, கொடைக்கானல், ஊட்டி, கோவை அடங்கிய பகுதிகளை ஐக்கிய கேரளம் என்று அறிவிக்க மலையாளிகள் போராடினர். காவேரிப்பாக்கம், மீஞ்சூர், பொன்னேரி, விழுப்புரம், சென்னை, வேலூர் ஆகிய பகுதிகளை விசால ஆந்திரம் என்று தெலுங்கர்கள் மதராசு மனதே என்று சொந்தம் கொண்டா டினார்கள். காவிரி ஓடும் பகுதிகள் எல்லாம் தங்களுக்கே என்று கன்னட ர்கள் மார்தட்டினார்கள்.

எல்லைகள் திருச்செந்தூர், தமிழ்நாட்டின் திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை, மதுரை மட்டும் 16.08.1947இல் 20 பேருடன் வடக்கு எல்லைப் போராட்டம் நடத்திச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. திருப்பதியை மீட்கப் பயணம் சென்றார்.

ஆந்திரர்களுக்கும் வழியில் தமிழர்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது. அப்போது உடன் சென்ற தமிழ் ஆசிரியர் மங்கலம் கிழார், நிலைமை விபரீதம் ஆவதைப் புரிந்து கொண்டு திரும்பிப் போய் விடுவோம் என ம.பொ.சியிடம் கூறினார். ஆனால், அதனை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

போராட்டத்தில் கலந்து கொண்ட வர்கள் திருத்தணி கே.விநாயகம், ரசீத், ஆற்காடு நரசிம்மன், கவிஞர் கா மு ஷெரீப், சின்னஅண்ணாமலை, கவிஞர் கு மா பாலசுப்பிரமணியம், கவிஞர் கு ஷா கிருஷ்ணமூர்த்தி, ஜி உமாபதி, எம் ஏ வி வேனு, கவிஞர் வானம்பாடி, வேலூர் குப்புச்சாமி.

குமரி முதல் வேங்கடம் வரை புதிய தமிழகம் உருவாக்குவோம். இதில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று உறுதிபடக் கூறிவிட்டார்.

"தெற்கே குமரியும் வடக்கே வேங்கடத்தையும் விட்டுக்கொடுக்க மாட்டோம்! தமிழகத்தின் எல்லையைக் காப்போம்! தமிழா தூங்காதே!" என்று ம.பொ.சி. வீர முழக்கமிட்டார்.

காவலர் தாக்குதலில் திருவாலங்காடு கோவிந்தசாமி ஆந்திர ராஜமுந்திரி சிறையிலும் பழனி சிறையில் மாணிக்கமும் இறந்தனர்.

தெற்கு எல்லைப் போராட்டம் 1948இல் நடந்தது. பிப்ரவரி 8ஆம் நாள் நடந்த துப்பாக்கிச் சூட்டில் தமிழரசு கழகத்தினர் தேவசகாயம், செல்லையா பலியானார்கள். நேசமணி கைது செய்யப்பட்டு மூணாறு சிறையில் அடைக்கப் பட்டார். தமிழரசு கழகச் செயலாளர் பி.எசு.மணியத்தை ம.பொ.சி. அழைத்து மூணாறு சிறையில் உள்ள நேசமணியையும் பரமசிவன் பிள்ளையையும் சந்தித்தார். அதன்பிறகு தெற்கு எல்லைப் போராட்டம் தமிழகம் முழுவதும் பரவத் தொடங்கியது.

தெற்கு எல்லைப் போராட்டத் தளபதியாகக் கவிஞர் கா.மு.செரீப், சின்ன அண்ணாமலை ஆகியோரை ம.பொ.சி. நியமித்தார்.

இந்தப் போராட்டம் மேலும் வலு அடைந்தது. தெற்கு எல்லைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தத் தளபதி மார்சல் நேசமணியை ம.பொ.சி. கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு நேசமணி 1949ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் நாள் வட எல்லை மாநாடு சென்னையில் நடந்தது. இதற்குத் திருவிதாங்கூர் காங்கிரசின் சார்பில் அழைக்கப்பட்டார். குமரியில் ஒரு எல்லை மாநாடு நடத்துங்கள் என்று ம.பொ.சி. அவரிடம் கேட்டுக்கொண்டார்.

1950ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் நாள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின் கூட்டம் நடந்தது. அதில் ம.பொ.சி பங்கேற்று தமிழக எல்லை வரைபடத்தை வெளியிட்டார்.

1954ஆம் ஆண்டு சூன் 3, 4ஆம் நாள்களில் தமிழரசு கழக முதலாவது மாநாடு நாகர்கோவிலில் நடந்தது. மாநாடு அரங்குக்குத் தேவசகாயம், செல்லையா பெயர் சூட்டப்பட்டது. மாநாட்டில் பங்கேற்ற பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், அப்போதைய கோள முதல்வர் பட்டம் தாணுப் பிள்ளையைக் கண்டித்துப் பேசினார்.

அப்பொழுது திரைப்பட இயக்குநர் ஏ.பி.நாகராஜன், வீரபாண்டியக் கட்டபொம்மன் ஓரங்க நாடகத்தை நடத்தினார்.

அதில் அவர் ஒரு பிடி மண்ணைக் கூட அயலாருக்கு விடமாட்டோம் என்று பேசிய வசனங்கள் மாணவர்கள் நடுவில் எழுச்சி ஊட்டுவதாக இருந்தது. இது போராட்டத்துக்கு வலு சேர்த்தது. 13 பேர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார்கள்.

பட்டம் தாணுவின் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று அகில இந்திய பிரஜா பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் ராம் மனோகர் லோகியா கண்டன அறிக்கை வெளியிட்டார்.

இந்த நிலையில் 1955ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரு ஓட்டில் பட்டம் தாணுப் பிள்ளை ஆட்சி கவிழ்ந்தது.

தெற்கு எல்லைப் போராட்டத்தில் நேசமணி, தேசிக விநாயகம் பிள்ளை, தினமலர் நிறுவனர் ராமசுப்பய்யர், பி.எசு.மணியம், சட்டநாத கரையாளர், குஞ்சன் நாடார். அவ்வை டி.கே. சண்முகம். கலைவாணர், என்.எஸ். கிருஷ்ணன், டேனியல், தாணுலிங்க நாடார், காரைக்குடி சங்கரக் குருக்கல், சங்கரன் பிள்ளை, கணபதி நாடார், கொடிக்காடு ஷேக் அப்துல்காதர், பகவதி கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிவதாணுப் பிள்ளை, சங்கரலிங்கம், பொன்னப்ப நாடார், நூர் முகமது ஆகியோர் பங்கேற்றுப் போராட்டம் உச்சம் அடைந்ததால் கோரிக்கையை ஆய்ந்து பார்க்கும் முடிவுக்கு ஆட்சியாளர்கள் தலைப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பசல் அலி, கே.எம்.பணிக்கர், எச்.என்.குன்சுரு, படாசுகர் ஆகியோர் அடங்கிய மாநில மறு சீரமைப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. அவர்களின் பரிந்துரைப்படி 1956ஆம் ஆண்டு மாநில மறு சீரமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் மொழி அடிப்படையில் 14 மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் அதனுடன் சேர்ந்து 6 யூனியன் பிரதேசங்களும் உருவாகின.

தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம் விளவங்கோடு, செங்கோட்டை நகர் பகுதி ஆகியவை தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டன. 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் குமரி மாவட்டம் உதயமானது. முதல்வர் காமராசர், அமைச்சர் பக்தவச்சலம் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

தீயாய் பரவிய வடக்கு எல்லைப் போராட்டமும் முடிவுக்கு வந்தது. திருவாலங்காடு தொடங்கி வட மாலவன் குன்றம் வரை திருத்தணியும் அதில் கலந்த 318 கிராமங்கள் பரவியுள்ள 417 சதுர மைல் நிலப்பரப்பும் நமக்குக் கிடைத்தன.

தமிழகத்துடன் திருத்தணி இணைந்த நாள் 01.04.1960. மொழி வாரி மாநிலம் அமைந்த நாளை மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். 01.11.1981 ஆம் ஆண்டு விழா எடுத்து கன்னியாகுமரி, திருத்தணி எல்லைப் போராட்டத்தில் இறந்த 13 பேரின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் வீதம் நிதி உதவி வழங்கினார். அதே போல் 50 தியாகிகளுக்குக் கேடயம் வழங்கிப் பெருமைப்படுத்தினார்.

எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு வயதான காலத்தில் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கிய தமிழக முதல்வர் மாண்புமிகு. ஜோசப் விஜய் அவர்களுக்கு எல்லைப் போராட்ட தியாகிகள் நெஞ்சார்ந்த மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

காரைக்குடி தியாகி
நா.கிருஷ்ணமூர்த்தி,
கதவு எண். 33,
இராமையா பிரதான சாலை,
ஜெய்ஹிந்த்புரம்,
மதுரை 625 011.
செல் எண்: 8903141311.

ஹிந்து பாரத் சேனா சார்பில் தேவர் ஜெயந்தி விழா!

திருப்பூர், அக். 31–

ஹிந்து பாரத் சேனா சார்பில் தேசியமும் தெய்வீகமும் என இரு கண்கள் என வாழ்ந்த மறைந்த தெய்வீக திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் குருபூஜை விழாவினை முன்னிட்டு திருப்பூர் கோல்டன் நகர் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அறுசுவை அன்னதானம் வழங்கும் விழா மாநகர் மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது ஆன்மீக செம்மல் அதிமுக நிர்வாகி சூர்யா செந்தில் அன்னதான விழாவினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கோட்ட பொறுப்பாளர் குமார். மாநில அமை ப்பாளர் நாகராஜ். மாநிலச் செயலாளர் பாலமுருகன் நிர்வாகிகள் செந்தில். ஹரிதாஸ்.சக்தி. அதிமுக 6 வது வார்டு செயலாளர் ராஜேஷ் குமார். பாஜக சார்பில் மண்டல பொறுப்பாளர் மாரிமுத்து. மற்றும் தேசபக்தர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்...

தேனி மாவட்டம் பெரியகுளம் கூட்டுறவு பண்டகசாலை விற்பனை நிலையத்தில் கூட்டுறவு துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ. 200க்கு 10 வகையான அத்தியாவசிய மளிகைப்பொருள்கள் அடங்கிய "சிறப்பு மளிகை தொகுப்பு"பினை மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகிருஷ்ணமூர்த்தி பயணாளிகளுக்கு வழங்கினார். உடன் பெரியகுளம் எம்.எல்.ஏ.சபரி ஐங்கரன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, ஆண்டிபட்டி–தேனி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் சிலைக்கு ஆண்டிபட்டிஅ.தி.மு.க. கிழக்கு ஒன்றிய செயலாளர் பொன் முருகன், முன்னாள் பொதுகுழு உறுப்பினர் சேட்.ப.அருணாசலம், பீமராஜ் மற்றும் பேரூர் செயலாளர் அருண்மதி கணேசன் ஆகியோர் கட்சி தொண்டர்களுடன் சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பழனியில் தேவர் ஜெயந்தி விழா: அதிமுக சார்பில் மாலை அணிவித்தனர்

பழனி அக்டோ 31–

பழனி அடிவாரத்தில் சுதந்திர போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் ஜெயந்தி விழா நடைபெற்றது. அதிமுக சார்பில் தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இதை முன்னிட்டு பழனி அடிவாரம் பகுதியில் உள்ள அவரது சிலைக்கு ரவி மனோகரன் எம் எல் ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் நகரச் செயலாளர் முருகானந்தம், ஒன்றிய செயலாளர்கள் டி முத்துசாமி, ஆர் எம் டி சி மாரியப்பன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ் பி அன்வர்தீன், பாலசமுத்திரம் பேரூர் செயலாளர் சக்திவேல், மற்றும் அதிமுக நிர்வாகிகள் குகன், மணிகண்டன், எஸ் கே பாபு, சிவசுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர்.

தென்னிந்தியாவின் முன்னணி கண் மருத்துவ நிறுவனமான 'லோட்டஸ் கண் மருத்துவமனை & ஆராய்ச்சி நிறுவனம்' (Lotus Eye Hospital & Institute), ஈரோட்டில் தனது 11–வது முழுமையான கண் மருத்துவமனை திறப்பு விழாவை கைத்தறித்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி கலந்துகொண்டு திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் D. சண்முகன், மேற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் K. K. ஆனந்த் மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர். விழாவிற்கு லோட்டஸ் கண் மருத்துவமனை நிறுவனர் Managing Director சங்கீதா சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார். நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் K. S. ராமலிங்கம் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பசும்பொன் முத்துராமலிங்கதேவர் ஜெயந்தியை முன்னிட்டு, ஆண்டிபட்டி –தேனி சாலையில் உள்ள முத்துராமலிங்கதேவர் சிலைக்கு, ஆண்டிபட்டி அ.தி.மு.க. கிழக்கு ஒன்றிய செய லாளர் பொன் முருகன், சேட்.ப.அருணாசலம், பீமராஜ். பேரூர் செயலாளர் அருண்மதி கணேசன் மற்றும் தொண்டர்களுடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

லட்சிய ஜனநாயக கட்சி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில் வாண்டையார் பசும்பொன் பக்தர்கள் பேரவை நிறுவனத் தலைவர் ராயல் லட்சுமியின் ஆகியோரது தலைமையில் இருந்து திருப்பூரிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு மதுரையில் உள்ள கோரிப்பாளையத்தில் இருக்கும் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த விட்டு பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தப்பட்டது இந்த நிகழ்வில் மாநில மாவட்ட நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பழனியில் தேவர் சிலைக்கு கந்த விலாஸ் அதிபர் என்.செல்வகுமார் மாலை அணிவித்தார்!

பழனி அக்டோபர் 31

பழனியில் சுதந்திர போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா நடைபெற்றது. தேவர் சிலைக்கு, கந்த விலாஸ் அதிபர் என் செல்வக்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அருகினில் பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, அரிமா பிரமுகர் சுந்தரம், முன்னாள் கவுன்சிலர் மற்றும் தேவர் பேரவை நிர்வாகி எம் முருகானந்தம், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் எம் பத்மினி முருகானந்தம், முன்னாள் கோவில் சூப்பிரண்டு நெய்க்காரப்பட்டி முருகேசன், தமிழக வேளாளர் பேரவை ஆயக்குடி சிவசுப்பிரமணியன் ஆகியோர் உட்பட ஏராளமான பங்கேற்றனர்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020